முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1184

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.12.2022, திங்கட்கிழமை

1. ஞானசக்தியே அரங்கா வாழ்க
   ஞானிகள் பலம்கொண்ட தேசிகா வாழ்க
   தானதர்மத்தின் மகா சூட்சுமமாய்
   தரணியில் தர்மசாலை அமைத்து இயக்குகின்ற அரங்கனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 11 ம் நாள் 26.12.2022, திங்கட்கிழமை)
   தாழ்விலா அரங்கன் ஓங்காரக்குடில்
   இந்த தரணியையே மாற்றவந்த ஞானசபையாகும்
3. சபைதனில் உலகோர் சரணாகதி கொண்டு
   சற்குருவே என வணங்கி தீட்சை ஏற்று
   அபயமென அரங்கன் அன்னதான சேவையை
   அனுதினமும் உயர்தொண்டாக செய்து வருதல் காண
4. காணவே உலகோர்க்கு சடுதி மாற்றம்
   கலியுகத்தில் ஞானவான்கள் ஆகும் வாய்ப்பாக
   தானாக அரங்கன் தயவாலே கனிந்து
   தரணியை மீட்கும் ஞானவான்களாக சிறந்து
5. சிறந்துமே உலகோர் அரங்கன் தேடுகின்ற
   சிறப்பறிவுமிக்க ஞானிகளாக மாறுவர்
   மாற்றம் தொட்டு கலியுகத்தில் இனிதே மகான்களின் ஞான ஆட்சிக்காலம்
   ஆற்றல்பட வெகுவிரைவில் அமையும் அரங்கன் சேவையால் இந்த அற்புதம் நிகழும்
6. அரங்கனுக்குள் யானிருந்து சர்வமுமாய் இயக்கிவர
   அரங்கனின் திருவடி பற்றி உலகமக்கள்
   வரங்கள் கேட்டு தொடர்ந்து வந்தால் போதும்
   வடிவேலன் என் வெளிப்பாடு உறுதியாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–